2. தகவல் கோரல்

கிருஷ்ணா நதிநீர்த் திட்டப் பணி—ஆந்திரத்திற்கு மத்திய அரசு நிதி உதவி.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் குடிநீர் வழங்கக்கூடிய தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு, ஆந்திர அரசுக்கு மத்திய அரசு 60 கோடி ரூபாய் வழங்கியுள்ளதாக, ஆந்திர பொதுத் துறை அமைச்சர் மாண்புமிகு சந்திரமோகன் ரெட்டி அவர்கள் நெல்லூரிலே ஒரு பேட்டியிலே கூறியிருக்கிறார்கள். நம்முடைய தமிழக அரசும் ஏற்கெனவே இதற்கான முழு முயற்சியை எடுத்துக் கொண்டிருக்கிறது. அந்தத் தெலுங்கு கங்கைத் திட்டத்திற்கு நம்முடைய பகுதிக்கு மத்திய அரசு ஏதாவது நிதி உதவியை—அந்த 60 கோடி ரூபாயிலே நமக்கு ஏதாவது பங்கு உண்டா அல்லது நமக்குத் தனியாக மத்திய அரசு— கொடுக்குமா; ஒருவேளை மத்திய அரசு கொடுக்கவில்லையென்று சொன்னால், நம்முடைய மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி நாமும் 60 கோடி ரூபாயை இந்தத் திட்டத்திற்குப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் குடிநீர் வழங்குகின்ற கிருஷ்ணா திட்டத்திற்கோ, அதனுடைய பணிகளுக்கோ அல்லது மேம்பாட்டுப் பணிகளுக்கோ மைய அரசிலிருந்து தமிழக அரசுக்கு எந்தவித நிதியொதுக்கீடும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கிட்டத்தட்ட அதனுடைய பராமரிப்புச் செலவிற்காக, ஒரு வாரத்திற்கு முன்பாக, 84 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் . . .

திரு. வி.கே. லட்சுமணன்: பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன, சொல்லுங்கள்.

திரு. வி.கே. லட்சுமணன்: அறையிலே வந்து சொல்கிறேன்.